[2018 ஜூன் 6

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

136—

நெல் சேமிப்பு கொள்கலன்

***17373—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு பகுதியில் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய நெல் சேமிப்புக் கொள்கலன்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் அருகே வல்லம் வடக்குப் பகுதியில் 15,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன நெல் சேமிப்புக் கொள்கலன்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் தஞ்சாவூர், ஒரத்தநாடு மற்றும் திருவையாறு ஆகிய பகுதிகளில் கொள்முதல் செய்யப்படும் நெல்மணிகளைச் சேமித்து வைக்க வாய்ப்பு உள்ளது. இந்த நெல் கொள்கலன்கள் திருவையாறு தொகுதிக்கு அருகிலேயே அமைந்துள்ளதால், திருவையாறு பகுதிக்கென தனியாக நவீன தொழில்நுட்ப நெல் சேமிப்புக் கொள்கலன்கள் அமைப்பதற்கான அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

2018 ஜூன் 6]

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லைப் பாதுகாக்கின்ற கடமை நம்முடைய அரசுக்கு உண்டு. 1996-2001 ஆம் ஆண்டுகளில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், தஞ்சை மாவட்டத்தில் அதிகபட்சமாக 14 இலட்சம் டன் நெல்லை விவசாயிகளிடமிருந்து பெற்றார்கள். இப்பொழுது இருப்பது போன்று நவீன முறையில் நெல்லைச் சேமித்து வைக்கின்ற அளவிற்கு அப்பொழுது கிடங்குகள் இல்லை. அப்பொழுதெல்லாம் open storage-ல், திறந்தவெளிக் கிடங்குகளில் அந்த நெல்லை வைத்தோம். அதனால், நெல் மழையில் நனைந்தது; துறைக்கும் ஏகப்பட்ட நஷ்டத்தை ஏற்படுத்தியது. ஆனால், விவசாயிகள் நஷ்டம் அடையாமல் இருப்பதற்காக, தலைவர் கலைஞர் அவர்கள் உற்பத்தி செய்யப்பட்ட குறுவை நெல் அனைத்தையும் அன்றைக்கு வாங்கினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்க விரும்புவது என்னவென்றால், இந்த அரசு வந்ததற்குப் பிறகு நாகை மாவட்டத்தில் நவீன நெல் கொள்கலன்கள் Silos, NABARD வங்கியின் உதவியுடனும், மேற்பார்வையுடனும், ரூ.60 கோடி மதிப்பீட்டில் எருக்கூரில் கட்டப்பட்டு வருகின்றன. அதனை நான் வரவேற்கிறேன். அதேபோல, அவர் பிறந்த திருவாரூர் மாவட்டத்தில், வலங்கைமானில் சென்ற ஆண்டு அறிவித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் இந்த அரசு அறிவித்திருக்கிற அந்த இடத்தை மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், பூதலூர் இரயிலடியை ஒட்டி அரசாங்கத்தினுடைய நிலங்கள் அதிகம் இருக்கின்றன. திருச்சி-தஞ்சாவூர் சாலை, சிதம்பரம்-திருச்சி சாலை, பெரம்பலூர்-மானாமதுரை போன்ற தேசிய நெடுஞ்சாலைகளும் அமைந்திருப்பதால், தரைவழிப் போக்குவரத்தின் மூலமாக நெல்லைக் கொண்டு வருவதற்கு எளிதாக இருக்கும். அதேபோல இரயில் மார்க்கமாக நெல்லை அனுப்புவதற்கும் ஏதுவாக இருக்கும். பூதலூர் ஒரு மேடான பகுதியாக இருக்கிறது. எனவே, அங்கு Silos அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1996-2001 ஆம் ஆண்டுகளில் ஒரு வருடத்தில் 14 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது என்றும், அதனைச் சேமிப்பதற்கான கிடங்குகள் எல்லாம் கட்டுவதற்கான ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டன என்றும் இங்கே குறிப்பிட்டார்கள். இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பும், பின்பும் இல்லாத அளவில் 2011-2012 ஆம் ஆண்டிலேதான் முதன்முதலாக 24 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லைக் கொள்முதல் செய்து, அதனைப் பாதுகாத்த அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதுமட்டுமல்லாமல், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும், நவீன தொழில்நுட்பத்துடன் சேமித்து வைத்து தரமான அரிசியை தயார் செய்து, விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தினை உயிரோட்டமாக வைத்துக்கொள்வதற்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நெல் கொள்கலன்களை, கிடங்குகளைக் கட்டுவதற்கு ஆணையிட்டார்கள். தமிழகத்திலேயே அரசின் சார்பில் முதன்முதலாக ரூ.67 கோடி மதிப்பீட்டில் சீர்காழி பகுதியில் எருக்கூரில் Silos *என்கிற அந்தப் புதிய நவீன நெல் கொள்கலனைக் கொண்டுவந்த தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதைப்போலத்தான் தஞ்சாவூர் மாவட்டத்தில் வல்லத்திலும், திருவாரூர் மாவட்டத்திலும் இந்தக் கொள்கலன்கள் அமைப்பதற்காக அறிவிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் கட்டப்படவிருக்கிற கொள்கலன்கள் 15,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்டவை; ரூ.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவிருக்கின்றன. இதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய ஆணைகளை வழங்கி அந்தக் கட்டடங்கள் மற்றும் கொள்கலன்களெல்லாம் கட்டப்படவிருக்கின்றன. வல்லம் வடக்குப் பகுதியில் கட்டப்படவிருக்கிற கொள்கலன்களுக்கான இடங்களைப் பார்ப்பதிலே பல்வேறு பிரச்சினைகள் இருந்தன. அந்தப் பிரச்சினையெல்லாம் தீர்க்கப்பட்டு, இடம் பார்க்கப்பட்டு, தற்போது 3.55 ஏக்கர் நிலத்தில் கொள்கலன்கள் கட்டப்படவிருக்கின்றன.

2018 ஜூன் 6]

திருவையாறு தொகுதி என்று பார்க்கும்பொழுது, பக்கத்திலிருக்கிற வல்லம்புதூர், திருமலை சமுத்திரம் போன்ற இடங்கள் இரண்டு, மூன்று கிலோ மீட்டர் தொலைவிலேயே அமைந்திருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், வல்லத்திலே உள்ள சக்தி விநாயகர் நகர், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய திருவையாறு தொகுதியையொட்டி அடுத்த தெருவில் உள்ளது. கொள்கலன்கள் கட்டப்படவிருக்கிற இடத்திற்கு அடுத்த தெருவிலிருந்தே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி ஆரம்பித்துவிடுகிறது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே இந்தத் திட்டத்தில் உங்கள் தொகுதி அதிகப் பயனைப் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய பகுதியிலும் ஒரு கொள்கலன் வேண்டும் என்கின்ற வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு, தேவையின் அடிப்படையில் அந்தக் கோரிக்கைகள் பின்னர் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வல்லம் பகுதிக்கு கொள்கலன் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அது அவசியம். ஆனால், நெல் உற்பத்தியை அதிகம் செய்கின்ற பகுதி, பூதலூர் ஒன்றியம் மற்றும் திருவையாறு பகுதி. அந்த நெல்லைச் சேமிக்கின்ற வகையில், எதிர்காலத்தில் அரசு திட்டம் தீட்டுகின்றபோது பூதலூரிலும் கொள்கலன் அமைக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. கடந்த 6 ஆண்டுகளாக ஜூன் 12 ஆம் நாளன்று தண்ணீர் திறக்கப்படவில்லை. தற்போது நடப்பது 7-வது ஆண்டு. கடந்த*

ஆண்டில், தண்ணீர் இல்லை; அதனால் திறக்கப்படவில்லை. அதன் காரணமாகத் தஞ்சை மாவட்டத்தில் முழு விவசாய உற்பத்தி நடைபெறவில்லை. என்றாலும், ஆழ்துளைக் கிணறுமூலம் கடந்த காலங்களில் ஓர் ஏக்கருக்கு 8 மூட்டைகள் 10 மூட்டைகள் என நெல் உற்பத்தி செய்தவர்கள் இன்றைக்கு 45 மூட்டைகளுக்குமேல் பெரிய அளவில் நெல்லை உற்பத்தி செய்து வருகின்றார்கள். பல்வேறு infrastructure-*ஐ நாம் உருவாக்கி, வேளாண்மைத் துறை, கூட்டுறவுத் துறை அனைத்தும் இணைந்து பணியாற்றினால்தான் விவசாயிகளைக் காத்திட முடியும். அதன் அடிப்படையில் எதிர்காலத்தில் முழுமையாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இருங்கள். இருங்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிஷம். முழுமையாக உற்பத்தி செய்கின்ற. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இருங்கள். இருங்கள். உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது என்பதற்காக நீங்கள் இப்படிப் பேசிக்கொண்டே போனால் எப்படி? ஒரு கேள்விக்கு இவ்வளவு நேரம் எடுத்துக்கொள்கிறீர்கள். நிறைய உறுப்பினர்கள் துணைக் கேள்விக்கு வாய்ப்பு தர மாட்டேன் என்கிறீர்களே என்று என்னிடம் வந்து கேட்கிறார்கள். ஒரு மணி நேரத்தில் எவ்வளவு* maximum *வாய்ப்பு அளிக்க முடியுமோ, நான் அந்த அளவு வாய்ப்புக் கொடுக்கிறேன். ஆனால், நீங்கள் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வாய்ப்பில் நீண்ட கேள்வியைக் கேட்டுக்கொண்டிருந்தால், மற்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது.* (குறுக்கீடு) *எனவே, கேள்வியைக் கொஞ்சம் சுருக்கமாகக் கேட்டு முடியுங்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூதலூரில் ஓர் இரயில் பாதை இருக்கிறது. 3 தேசிய நெடுஞ்சாலைகள் இருக்கின்றன. வல்லத்தில் அளிப்பதில் தவறில்லையென்றாலும், எதிர்காலத்தில் பூதலூரில் சேமிப்பு* Silos *ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

2018 ஜூன் 6]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திருவையாறு தொகுதியைச் சேர்ந்த பூதலூர் ஒரு முக்கியமான இடம். அதில் இரண்டாவது கருத்து யாருக்கும் கிடையாது. எப்படியென்றால், பூதலூர் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பூதலூரைத் தனித் தாலுகாவாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, பூதலூரைத் தனித் தாலுகாவாக ஆக்கியது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காகத்தான் சொன்னேன் அந்தப் பகுதி நெல் விளைகிற பகுதி. தேவைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதை நான் ஏற்கெனவே சொன்னேன். அந்தப் பதிலைத்தான் மறுபடியும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

137—

ஜவுளிப் பூங்கா

***23786—திரு. பி. வி. பாரதி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைப்பது குறித்த செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.